# திராவிடன்

வாரவெளியீடு ஆசிரியர் என்.வி.நடராசன்

9-11-63

சனிக்கிழமை

மாலை 17. மலர் 15.

விலை: 16 காசு.


## கக்கனரின் கண் திறக்கட்டும்!

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பணியாற்றி, அவர்களது ஏற்றத்துக்குப் பல்லாண்டுகளாகப் பாடுபட்டு வருவது தி. மு. கழகம் என்பதை அனைவரும்ஒப்புக் கொள்வர்.

திராவிட இயக்கமாக அது இயங்கிய போதும், பிறகு தி. மு. கழகமாக மலர்ந்து பணியாற்றிவரும்இந்நாட்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வருவது மட்டுமல்லாமல், சமுதாயத்தில் அவர்களது நிலை உயர வேண்டுமென்பதற்காக கழகம் அரும்பணியாற்றி வருகிறது.

ஆனல் அமைச்சர் கக்கன் அவர்கள், தாம்மட்டும் தான் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருவதாகக் கருதிக்கொண்டு தி. மு. கழகத்தைத் தனது வழக்கமான பாணியில் தாக்கியுள்ளார்.

சென்னை மாநகராட்சி மேயர் குசேலர் அவர்கள் அண்மையில் ரஷ்யா செல்வதற்கு கழகம் ஏன் பணம் கொடுக்கக் கூடாது, இது தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கழகம் அளிக்கும் உதவியா என்றெல்லாம் அமைச்சர் கக்கன் அவர்கள் தெரிவித்தாராம்.

ரஷ்யா செல்வதற்கு தாம் கழகத்தை உதவி கேட்கவில்லை என்றும், இதற்கு முன்னர் ரஷ்யா சென்ற முன்னுள் மேயர் முனுசாமி அவர்கள் தனது சொந்தப் பொறுப்பிலேயே சென்றதாகவும், அமைச்சர் கக்கன் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் கழகத்தில் எந்தபேதமும் ஏற்றத் தாழ்வும் இல்லையென்றும், சென்னைமேயர் தக்க முறையில் பதிலளித்தார்.

ஆனல் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைக் களையவே அவதாரம் பூண்டதாகச் சொல்லிக்கொள்ளும் கனம் கக்கன் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெருந்தலைவராகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குச் சிலை அமைக்கும் பிரச்சினையில், தாம் நடந்துக் கொண்ட போக்கைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காலஞ்சென்ற டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெருந் தலைவர்!

தாழ்த்தப்பட்ட மக்கள் நசுக்கப்பட்டு கிடந்த நேரத்தில் அரசியல், சமுதாய பொருளாதாரத் துறைகளில் எவருக்கும் தலைவணங்காது போராடிய மாவீரர்!

இந்திய அரசியல் சட்டத் தயாரிப்பின் தந்தை!



டாக்டர் அம்பேத்கார்

இந்தியத் துணைக்கண்டத்தின் சட்ட அமைச்சர்!

தலை சிறந்த வழக்கறிஞர்—சட்ட விளக்க கர்த்தா!

தலைசிறந்த கல்வி நிபுணர்! இவ்வளவு சிறப்புக்களையும் கொண்ட டாக்டர் அம்பேத்கார் அவர்களது உருவச்சிலையை, சென்னை மெரினு கடற்கரையில் அமைப்பது என முடிவு செய்து, அதற்குரிய அனுமதியை அரசாங்கத்திடம் கோரப்பட்டது.

ஆனல் அரசாங்கம் அனுமதி அளிக்க மறுத்து விட்டஃது என சென்னை மாநகராட்சி ஆணையாளர், மாநகராட்சி மன்ற கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

அரசினரின் மறுப்புக்காரணமாக, அம்பேத்காரின் உருவச்சிலை சென்னை மாநகராட்சி மன்ற ஸ்டேடியம் மைதானம் முன்னுல் அமைக்கப்பட விருக்கிறதாம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தம்முடைய காங்கிரஸ் சர்க்கார் தான் அவர்களுக்காகப் பாடுபடுகிறது என்ற கருத்தில் பேசும் அமைச்சர் கக்கன் அவர்கள் இப் பிரச்சினையில் செய்திருக்க வேண்டியது என்ன?

அம்பேத்காரின் தொண்டை அமைச்சர் கக்கன் மதித்திருந்தால், அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க தாமே முன்னின்று அதற்குரிய அனுமதியை வழங்கி, மெரினு கடற்கரைப் பாதையில் சிறந்த இடமாக ஏற்பாடு செய்து கொடுத்திருப்பார்.

ஆனல் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரே தலைவரான அம்பேத்காரையே மதிக்கும் மனவளம் பெற்றிருத அமைச்சர் கக்கன் அவர்கள், அம்பேத்கார் அவர்களது பெயரில் பல படிப்பகங்களையும், துணைமன்றங்களையும் வைத்திருக்கும் தி. மு. கழகத்தின் மீது அவசியமற்ற முறையில் தனது காழ்ப்பைக் காட்டிக்கொண்டிருப்பது அவர் வகிக்கும் பதவிக்கு அழகாகுமா?

பல்லாண்டு காலமாகக் காங்கிரஸ், சென்னை மாநகராட்சியில் ஆட்சி செலுத்தியும் இதற்குமுன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மேயராக இருந்தும், கழகத்தின் ஆட்சிக் காலத்தில்தான் அம்பேத்காரின் சிலை திறக்கப்படுகிறது என்ற எரிச்சலின் காரணமாக அமைச்சர் கக்கன் அவர்கள் கழகத்தைக் காய்கிருரா?

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அமைச்சராகமட்டும் இருந்து நாட்டுக்கு அறிமுகமானவரல்ல!

நாட்டுப் பெருந் தலைவர்களில் ஒருவர் அவர்!

சமுதாயத்தை உருவாக்கிய சிற்பிகளின் வரிசையில் அம்பேத்காருக்குச் சிறப்பிடம் உண்டு!

அத்தகைய சீர்த்திருத்த வீரர் ஆற்றிய மகத்தான தொண்டுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டாவது அமைச்சர் கக்கன் அவர்கள் அவரது சிலையை மெரினு பகுதியில் அமைக்க வழிவகை செய்திருக்க வேண்டும்!

அத்தகைய பணிகளைச் செய்ய தம்மால் இயலாவிட்டாலும், செய்கிறவர்களின் சிந்தை நோகாவண்ணமாவது பேசுதல் வேண்டும்!

அதுவும் இயலாவிட்டால்! பேசாமல் இருப்பதே பெருந்தொண்டாகும்! கனம் கக்கனரின் கருத்துக் கண் திறக்கட்டும்!

நக்கீரன்

## அம்பேத்காரின் சிலை அமைக்க அனுமதி மறுக்கப்பட்டதேன்?

## தலையங்கம்

மாலை 17. 9—11—63 மலர். 15

# அறிவு கொளுத்துதல்!

—[...]—

[ என். வி. என். ]

இந்தி பேசாத மக்கள்மீதும் குறிப்பாக தென்னக மக்கள்மீதும் இந்திய அரசினர் இந்தியைத் திணிக்கும் அநீதியைக் கடந்த ஓராண்டுகாலமாக திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்கூறி கண்டித்து வந்திருக்கிறது. இந்தி ஆதிக்கம் தென்னுட்டின்மீது படையெடுத்த ஒவ்வொரு சமயமும், திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போர் தொடுத்து இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து வந்திருப்பதையும் நாடறியும். இவ்வளவிற்குப் பிறகும் இந்திய அரசினர் தென்னக மக்களின் மனவேதனையை அறிந்துகொள்ளும் மனவளமில்லாமல், பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் தனக்கிருக்கும் எண்ணிக்கை பலத்தைக்கொண்டு இந்தியைத் திணிக்க முற்பட்டிருத்கிறது.

சனநாயக அடிப்படையில் எண்ணிக்கைபலமே அளவுகோல் என்பதை நாம் மறுக்கவில்லை, ஆனுல் இந்தித் திணிப்புப் பிரச்சினையில், இந்தியப் பிரதமர் தாம் தமது சர்க்கார் சார்பில் பாராளுமன்றத்தில் கொடுத்த உறுதிமொழியை மீறி இந்தியைத் திணித்திருக்கிருர். இந்த அநீதிக்கு பாராளுமன்றத்தின் எண்ணிக்கை பலத்தைத் துணையாகக் கொள்வதானது, சனநாயகப் பண்பை படுமோசமான செயலுக்குப் பயன்படுத்திய குற்றத்துற்கு ஒப்பாகும். எனவேதான் இந்தித் திணிப்பு, மொழி ஆதிக்கம் மட்டுமின்றி சனநாயகத்தை வேரறுக்கச் செய்யும் கொடிய செயலுமாகும்.

அதுமட்டுமல்லாமல் பெருவாரியானவர்களின் எண்ணத்திற்கு குறைவான எண்ணிக்கையுடையோர் கட்டுப்படவேண்டும் என்பதில்கூட, பிரச்சினைகளின் தன்மையைப் பொறுத்து பெருவாரியானவர்கள் விட்டுக்கொடுப்பதன் வாயிலாக மற்றவர்களின் ஐயப்பாடுகள் நீங்கித் தோழமை வளர வழிவகை செய்யும். ஆனுல் இந்திப் பிரச்சினையில் துவக்கத்திலிருந்தே இவ்வித அரசியல் அறத்தை ஆளவந்தார்கள் மேற்கொள்ளவில்லை.

அதற்குபதிலாக ஆதிக்க வெறிதான் வளரலாயிற்று. இன்னும் சொல்லப்போனுல் இந்தி மொழி பேசுவோர் பெரும்பான்மை எண்ணிக்கைக் கொண்டவர்களா என்பது கடுமையான விவாதத்திற்கு உட்பட்டதாயிருந்து வருவதை எவரும் மறுப்பதற்கில்லை. இந்தி மொழிப் பிரச்சினையை முன்வைத்து தேர்தலில்நின்று கருத்தறிய காங்கிரஸ் ஆட்சியினர் நடுங்குவதிலிருந்தே அவர்களின் நிலையாதென்பது நன்கு எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே, முழுக்க முழுக்க மொழி ஆதிக்கவெறித்தன்மையுடன்தான் இந்தியைத் திணிக்க இந்திய அரசினர் முற்பட்டிருக்கிருர்களேயன்றி அவர்கள் பக்கம் சிறிதுகூட நியாயமில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் இவ்வித கருத்துக்களை எடுத்துக்கூறி இந்தித்திணிப்பை எதிர்த்துவந்தால் அது எதிர்க்கட்சி, சர்க்கார் செய்யும் எதையும் எதிர்க்கும் என்று குருட்டுவாதம் பேசலாம். அதுபோலவே இந்தித் திணிப்பை எதிர்க்கும் சுதந்திரா கட்சி, முஸ்லீம் லீக் ஆகியவைகளையும் சர்க்காருக்குப் பிடிக்காத கட்சிகள் என்று ஒதுக்கிவிடலாம்.

ஆனுல் காங்கிரஸ் சார்புடைய பெரும் கல்வி நிபுணர்களும் நிர்வாகத்துறை நிபுணர்களும் கூறும் புத்திமதிகூட அலட்சியப் படுத்தப் படுகிறது என்ருல் காங்கிரஸ் ஆட்சியினருக்கு ஒன்று அறிவு சூன்யமாயிருக்க வேண்டும் அல்லது அதிகார ஆணவநோய் அந்த ஆட்சியைப் பிடித்திருக்கவேண்டும் என்றுதானே ஐயுற வேண்டியிருக்கிறது. கடந்த ஓராண்டு காலமாக கழகமும், மற்ற கட்சிகளும், கல்வி நிபுணர்களும் எடுத்துக்கூறும் வேண்டுகோளை புரிந்துகொள்ளும் அறிவு சக்தியை இழந்துள்ள இந்த ஆட்சியினருக்கு அறிவு கொளுத்த வேண்டியது மக்களின் கடமையாகும்.

ஆதலினுலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் சட்டத்திலுள்ள இந்தித் திணிப்பு பிரிவை மட்டும் கொளுத்தி அரசினருக்கு அறிவு கொளுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

கழகம் மேற்கொண்டுள்ள இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் மிகத் தூய்மையானது என்பதை விளக்க 5—11—63 அன்று சென்னை வண்ணைப்பகுதியில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் மேற்கண்டவாறு விளக்கிப் பேசியிருப்பதையும் இந்தித் திணிப்புப் பிரிவை மட்டும் கொளுத்துவதன் நோக்கத்தை விவரித்திருப்பதையும் நாம் எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

எனவே, இந்தித் திணிப்புச் சட்டத்தைக் கொளுத்தினுல் இத்தனை ஆண்டுகள் தண்டனை என்று ஆளவந்தார்கள் சட்டப் புத்தகக்தைப் புரட்டிப்பார்த்து மிரட்டுவதைவிட, கொளுத்துவதன் நோக்கத்தையும் கழகத்தின் தூய்மையையும் மனமார உணர்ந்து, இந்தித் திணிப்பு உத்திரவை திரும்பப்பெற வேண்டுகிருேம்.

என்ருலும் நமது வேண்டுகோளை மதித்து அரசினர் தங்களது போக்கிலிருந்து திருந்திவிடுவார்களென்று நாம் எண்ணுவதற்கில்லை. ஆகவே கழக மாநாட்டில் அண்ணு அவர்கள் நமக்கிட்ட அன்புக் கட்டளைக்கேற்பவும், கழகம் தீட்டியுள்ள திட்டப்படியும் நவம்பர் 17-ம் நாளன்று நமது அண்ணு அவர்கள் துவக்கிவைக்கும் இந்தி எதிர்ப்புப் போரை—அரசினருக்கு அறிவு கொளுத்தும் நம் மொழி உரிமைப் போரை, உள்ளத்திலே மறமும், செயலிலே அறமும் கொண்டு நாம் நமது கடமையை இனிதே நிறைவேற்ற வேண்டுகிருேம்.

1963—நவம்பர் 17—அரசியல் வரலாற்றின் மறுமலர்ச்சி அத்தியாயத்துவக்கநாள் என்று கூறின் மிகையாகாது.

1963 நவம்பர் 17-ம் நாள் துவங்கி 1965 சனவரி 1-ம் நாள் வரை நாடெங்கும்தொடர்ந்துநடைபெற யிருக்கும் நிகழ்ச்சிகளை சிறிதுகூடகட்டுப்பாடு குலையாமல், பலாத்காரமின்றி, நாம் நிறைவேற்றுவதின் வாயிலாக நமது கழகத்திற்கும், நாம் பிறந்த தாய்நாட்டுக்கும், நமது எதிர்கால சந்ததிக்கும் அழியாப் புகழைத் தேடி வைத்தவர்களாவோம். அத்தகு அரும்பணிக்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக!

இந்தி ஒழிக!

வாழ்க அண்ணு!

வெல்க திராவிடம்!



## அண்ணு மூட்டுகிருர் தீ!

அரசியல் சட்ட மொழிப் பிரிவில்!

அவர் மூட்டும் தீ

அருந்தமிழர் உள்ளத்தில் உள்ள தீயே!

ஆகாத இந்தியினை அழிக்கும் தீயே!

## தீ மூட்டும் நாள் நவம்பர் 17

நமது குறிக்கோள்

# திராவிட யூனியன்

## கழக செயற்குழுவின் ஒருமனதான முடிவு

# ஆளும் வர்க்கம் விரித்த வஞ்சக வலை கிழித்தெறியப்பட்டது!

**"தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும், இந்திய அரசுரிமை—ஒருமைத் தன்மை-அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள், இயன்ற அளவு கூடுதலான அதிகாரம் பெற்று, நெருங்கிய திராவிட கூட்டமைப்பாக (திராவிட யூனியன்) நிலவப் பாடு படுவது"**

—என்று 3—11—63 அன்று சென்னை அறிவகத்தில் கூடிய தி. மு. கழகத்தின் செயற்குழு, தி. மு. கழகச் சட்டதிட்டத்தில் உள்ள விதி 2-ஐ நீக்கி, மேற்கண்ட புதிய குறிக்கோள் விதியை கழக விதி 2-ஆகச் சேர்த்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம், 3—11—63 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, சென்னை 'அறிவக'த்தில் கூடிற்று. கழக அவைத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்களான கீழ்ச்கண்ட தோழர்கள் கூட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா, மு. கருணாநிதி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், திருமதி சத்தியவாணி முத்து, ஏ. கோவிந்தசாமி, எம். எஸ். சிவசாமி, சி. வி. எம். அண்ணாமலை, எஸ். ஏ. இராசமாணிக்கம், எஸ். முத்து, ப. உ. சண்முகம், தில்லை வில்லாளன், கி. மனோகரன், எஸ். ஜே. உசேன், அ. பெ. தருமலிங்கம், டி. கே- சீனிவாசன்.

மற்றும் கூட்டத்தில், சிறப்பு அழைப்பின் பேரில் தோழர்கள் க. அன்பழகன், ப. நாரர்யணசாமி, நீலநாராயணன், தி. திராவிட மணி, இரா. செழியன், இராம. அரங்கண்ணல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் கழகச் சார்பில் வெளியிட்ட அறிக்கை குறித்து நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றி உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

1963 ஜூன் திங்களில் சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அமைக்கப்பட்ட கழகச் சட்டதிட்ட திருத்தத் தனிக்குழுவின் அறிக்கையைச் செயற்குழு பரிசீலனை செய்தது.

பின்னர் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டன.

### முத்துராமலிங்கனார்—பார்த்தசாரதி மறைவுக்கு அனுதாபம்.

(1) பார்வார்டு பிளாக் கட்சித் தலைவர் பசும்பொன் முத்து ராமலிங்கனார் அவர்கள் மறைவு குறித்தும், தியாகராய கல்லூரிக் காப்பாளரும் பழம்பெரும் தலைவருமான பார்த்தசாரதி அவர்கள் மறைவு குறித்தும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

### சட்டதிட்ட விதி (2) மாற்றப்பட்டது

(2) 1963 ஜூன் திங்கள் 8, 9, 10 ஆகிய நாட்களில் நடைபெற்ற சென்னை பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கழகத்தின் சட்டதிட்டத் திருத்தத் தனிக்குழுவினர் தந்த அறிக்கை பரிசீலிக்கப் பட்டது. அதன்படி கழக சட்டதிட்டத்தில் விதி 2 என்ற பகுதி நீக்கப்பட்டு, தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் இந்திய அரசுரிமை—ஒருமைத் தன்மை—அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரம் பெற்று, நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது'' என்ற குறிக்கோள் கழக சட்ட திட்டத்தின் விதி 2 ஆக சேர்க்கப்படுகிறது.

### அறப் போராட்டம்

(3) சென்னையில் 13—10—63ல் நிகழ்ந்த இந்தி திணிப்புக் கண்டன மாநாட்டில் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத் திட்டத்தை இச் செயற்குழு' முழு மனதோடு வரவேற்பதுடன், அந்தப் போராட்டத்தை நடத்துவதில் கழகத் தோழர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த அறப்போராட்ட முறைகளையும் கட்டுப்பாடுகளையும் மறவாமல், அமைதி குலையாமல் செயல்படவேண்டுமென்று இச்செயற் குழு கேட்டுக்கொள்கிறது.

### செயற்குழுவின் பாராட்டுதல்

(4) இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவினர், கழக சட்டத் திட்டத் திருத்தத் தனி குழுவினர் ஆகியோருக்கு செயற்குழு பாராட்டுதலைத் தெரிவிக்கிறது.

○

# கழகம் உணர்த்தும் கருத்து!

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இது வரை, கழகத்தின் வளர்ச்சியை சீர்குலையச் செய்யவும், கழகத்தை அழிக்கவும் கழகத்திற்கு மாறுபட்ட தனி நபர்கள் மாற்றுக் கட்சியினர் ஆளும் வர்க்கத்தினர் ஆகியோர் மேற்கொண்ட கோயபல்ஸ் பிரச்சாரங்கள், வசைமாரிகள் அடக்குமுறைக் கொடுமைகள் ஆகியவைகளை நாடு நன்கு அறிந்ததேயாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட நாட்களில் பெரியார் அவர்களும் அவரது 'விடுதலை' இதழும் காட்டிய எதிர்ப்பும் செய்துவந்த பிரச்சாரமும் இவைகளில் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

பெரியார் அவர்களின் பிரச்சாரத்தில் உண்மையிருக்கிறதோ இல்லையோ அதில் அவர் வெற்றி பெறுகிறாரோ இல்லையோ, அவரது பிரச்சாரம் சாதாரண மக்களின் உள்ளத்திலும் பாயக்கூடிய அளவுக்கு சக்தி படைத்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தான சக்தியாக விளங்கக் கூடிய அளவுக்கு கழகத்தின் கொள்கையும், பணியும், அதன் மாபெருந் தலைவர் அண்ணா அவர்களின் பொது வாழ்வும் தூய்மையானது. என்பதையே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மிட்டா, மிராசுகள், பணபலம் படைத்தவர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றோ அல்லது அதிகார வர்க்கத்தின் நிழலை நம்பியோ கழகம் தனது பயணத்தைத் துவக்கவில்லை. அதற்குப் பதிலாக ஏழை—நடுத்தர மக்களின் ஆதரவைக் கொண்டும், —நாமும் வாழவேண்டும் மற்றவர்களும் வாழவேண்டும் என்ற நற்பண்பு கொண்ட இலட்சக் கணக்கான மக்களின் இதய சுத்தியை பெருந் துணையாகக் கொண்டே கழகம், காங்கிரஸ் ஆட்சிபீடத்தினரின் மூர்க்கத்தனமான அடக்குமுறைகளையும் காங்கிரசுக்கு அடியாட்களைப் போன்று இருந்துவரும் கட்சிகளின் இழிச் செயல்களையும் தகர்த்தெறிந்து வந்திருக்கிறது. யல் விவேகத்துடன் ஆராய்ந்து பார்க்கும் மனவளத்தை தென்நாட்டிலுள்ள மாற்றுக்கட்சிகள் இழந்து விட்டதானது. மிக மிக வருந்தத் தக்கதாகும். இச்செயல் அக்கட்சிகள் தங்களுக்கு தாமாகவே அழிவை தேடிக் கொள்ளமிக விரைந்து நடைபோடுவதற்கு ஒப்பாகுமேதவிர கழகத்தின்வளர்ச்சியைச் சிறிது கூடதடுத்து விட முடியாது.

1949-ம் ஆண்டு ஆகஸ்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாள், கழகத்தை நமது அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் துவக்கியபோது பெரியார் அவர்கள், அண்ணா அவர்கள் மீது தனிப்பட்ட முறையில்கூட தாக்குதல் நடத்தினார். கழகத்தோழர்களிடையே பிளவு உண்டுபண்ணுவதற்காக தமது முழு ப•த்தையும் போதாக்குறைக்கு காங்கிரஸ் அமைச்சர்களின் துணையையும் பெற்று இடைவிடாத தாக்குதலை நடத்தினார். இந்தப் பயல்கள் எண்ணிப் பத்து நாட்களுக்கு ஒன்றாக இருப்பார்களாயென்று கேலி பேசினார். சுருங்கக்கூறின் வசைகாது தீர்ந்தது அதன் கதை! என்று கொக்கரித்தனர்.

தான் இல்லையேல் கழகம் இல்லை, என்ற தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு கழகத்திலிருந்து வெளியேறிய சம்பத்தைத் தொடர்ந்து சென்ற சில தோழர்களை நம்பி சம்பத்பேசியபேச்சுக்கு அளவேயில்லை. தாம்தான் கழகத்தின் அபார மூளையாக யிருந்து வந்ததாக எண்ணிக் கொண்டிருந்த தோழர் சம்பத், கழகத்தை விட்டு வெளியேறியதும், அவர் மேற்கொண்ட பிரச்சார முறை, நடந்துகொண்ட போக்கு ஆகியவைகள் கழகத்திலிருந்ததால் தான் சம்பத்துக்கு அரசியல் விவேகமும் பண்பும் இருந்து வந்தது என்ற உண்மையை உலகறியச் செய்துவிட்டார்.

பொதுத் தேர்தல் நெருங்கும் இந்தக் கட்டத்தில் கழகத்தில் பெரும் பிளவு ஏற்பட்டு சீர்குலையப் போகிறது என்று பேராசை கொண்டு தோழர் சம்பத்தையும் உசுப்பிவிட்டு வந்த ஆளுங்கட்சியினர் கட்டிவந்த மனக்கோட்டை

# 15 ஆண்டு கால படப்பிடிப்பு!

அதுமட்டுமல்லாமல் அவருக்கிருந்து வரும் பொதுப்பணியின் கால அளவு, பொதுப்பணியின் போது ஆற்றிய குறிப்பிடத்தக்க கடமைகள் ஆகியவைகளும் அவரது இன்றைய முரண்பட்ட பேச்சுகளுக்குக்கூட ஓரளவு வலுவையும், மதிப்பையும் அளிக்கின்றன என்றும் கூறலாம். ஆனாலுங்கூட அவ்வித சக்தி படைத்த பெரியார் அவர்களின் இடைவிடாத எதிர்ப்புப் பிரச்சாரமும், மற்ற ஏற்பாடுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை என்பதை பெரியார் அவர்களே மனமார ஒப்புக் கொண்டுள்ள உண்மையாகும். எனினும் அந்த உண்மையை மேடைகளில் பேசும்போது அவர் எப்படிக் கூறமுடியும்?

பெரியாரின் எதிர்ப்புப் பிரச்சாரமும் பிற ஏற்பாடுகளும் கழகத்தின் வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை யென்று நான் கூறுவதால் அண்ணா அவர்களும் அவருடனிருந்து பணியாற்றும் கழகத் தோழர்களும் பெரியாரை விட சூரர்கள், தீரர்கள் என்ற இறுமாப்பு கொண்டிருப்பதாக எவரும் கருதிவிடக் கூடாது. பெரியார் போன்ற தலைவர்களின் எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் பிற ஏற்பாடுகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவைகளைக் கடந்து இன்று கழகம் மக்களின் மகத்பிறகட்சிகளை அழிக்க வேண்டும் என்ற அற்பபுத்தி தி. மு. கழகத்திற்குக் கிடையாது. பிற கட்சியினரிடம் பகைமையை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்ற இறுமாந்த எண்ணங்கூட கழகத்திற்குஇருந்ததில்லை இனியும் இருக்கப் போவதில்லை. கொள்கையை முன்வைத்தே கழகம் தனது கடமைகளை நிறைவேற்றியிருக்கிறது. காலமும், மக்களும் அதற்கு அனுமதியளிப்பதற்கேற்ப தனது பணியினை நிறைவேற்றி வரும். பிற கட்சிகளின் கொள்கைதான் வரவேற்கக் கூடியது என்று மக்கள் தீர்ப்புக் கூறுவார்களோயானால் கழகம் அதற்கு குறுக்கே நிற்கப் போவதில்லை. இவ்வித சிறந்த பண்புகளைக் கொண்ட கழகத்தை அழிக்க ஆளும்கட்சியினர்தான் ஆதிக்க வெறியில் மூழ்கியிருக்கிறார்கள் என்றால் மாற்றுக் கட்சிகளுமா அந்த வெறியை மூழ்கி கழகத்தை அழிக்க முனைய வேண்டும்.

பொதுத் தேர்தலிலும், அடுத்து நடை பெற்ற இடைத் தேர்தல்களிலும் கழகத்திற்கு மக்கள் அளித்துவரும் ஆதரவை அரசிமாரி களத்தில் வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்! இதைக்கண்டு அண்ணா அவர்களே சற்றுதிகைத்தார் என்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? இறுதியாக பெரியார் அவர்களின் பிரச்சார வேகம் மங்கிமறைந்தது. கழகத்தில் மக்கள் மன்றத்தில் மட்டுமல்லாது பாராளுமன்றத் துறையிலும் பணியாற்றும் அளவுக்கு பேராதரவு கிடைத்தது. கழகம் அழிந்துவிடும் என்று தலைகால் தெரியாமல் குதித்தவர்களெல்லாம் தலைகுனிந்து இருக்குமிடம் தெரியாமல் ஒளிந்தனர்.

பெரியாரின் பிரச்சாரத்தினால் தி. மு. கழகம் மட்டுமல்லாமல் பெரியார் கட்சியும், பொதுவாக திராவிட இயக்கமே அழிந்தொழிந்து விடும்என்றஆசாபாசத்தில்மூழ்யிருதவர்களெல்லாம்பெருமூச்சு விட்டு முணுகிக்கொண்டே திக்கு தெரியாமல் ஓடினார்.

## இரண்டாவது கட்டம்

அடுத்தபடியாக தோழர் சம்பத் கழகத்தை விட்டு வெளியேறிய கட்டத்தில் ஆளும் கட்சியினர் எப்போதும் இல்லாத புது நம்பிக்கையுடன் கழகம் இனி பிழைக்கயைச் சொல்லி முடியாது. தேர்தலில் தி. மு. க. படுதோல்வி அடைந்துவிடும், இன்னும் 20 ஆண்டுகள் நமது பேராசைக்கு, எந்த ஆபத்தும் இல்லை என்று பல் விளக்கிக் கொண்டிருந்தனர்.

அதுபோலவே தமது அசகாய சூரத்தனத்தைக் கண்டு கழகத்திலிருந்து பலர் வெளியேறி தம்முடன் சேர்ந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்த சம்பத்துக்குத் தெளிவு ஏற்படும் வகையில் அவருடன் சென்ற மிகச் சில தோழர்களில் சரி பகுதியினர் தங்கள் தவறுகளை உணர்ந்து மீண்டும் கழகத்திலேயே சேர்ந்துவிட்டனர்.

தோழர் சம்பத்தின் கதைதான் இந்தக் கதிக்கு ஆளாயிற்றென்றால் அவருக்கு மறைமுகமாக துணைபுரிந்துவந்த ஆட்சியாளர்களின் கதை மிக மிக பரிதாபமாக முடிந்தது. கழக சார்பில் 15 பேர் வீற்றிருந்த சட்டமன்றத்தில் 50 பேரும், 2 பேர் வீற்றிருந்த பாராளுமன்றத்தில் எட்டு பேரும், எல்லாவற்றிற்கும் சிறப்பாக பாராளுமன்ற மேலவையில் அறிஞர் அண்ணா அவர்களும் இடம் பெறக்கூடிய வகையில் கழகம் வலுப்பெற்றது. அதுமட்டுமல்ல, அடுத்து தமிழகத்தில் நடைபெற்ற திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத்தேர்தலிலும், திரு

(9-ம் பக்கம் பார்க்க)

o என். வி. என். o

# நமது இலட்சியம்!

## அண்ணா தரும் விளக்கம்

3—11—63 அன்று சென்னையில் நடைபெற்ற கழக செயற்குழுக் கூட்டம், கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அக்கூட்டத்தில் ஒருமனதாக திருத்தப்பட்ட கழக விதி 2-ஐ விளக்கி அறிஞர் அண்ணா அவர்கள் தந்துள்ள விளக்கம் கழகத் தோழர்கள் ஒவ்வொருவருக்கும் அரிய கேடயமாகும். இன்னும் சொல்லப்போனால் ஆளும் கட்சியினரும் இவ்விளக்கத்தை நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்த்து தெளிவு பெறுவதற்கும் பெருந்துணை புரியும் என்று கூறின் மிகையாகாது. விளக்கம் வருமாறு :—

சென்ற ஜூன் 10-ஆம் தேதி சென்னையில கூடிய பொதுக்குழுவில் அமைக்கப்பட்ட கழகச் சட்டதிட்டத் தனிக்குழு, இந்திய அரசியல் சட்ட 16-வது திருத்தத்தை ஒட்டி எழுந்துள்ள நிலைமையினை ஆராய்ந்து, கழகச் சட்டதிட்டத்தில் ஏற்படுத்தப்படவேண்டிய மாறுதல் குறித்து ஒரு அறிக்கையை என்னிடம் தந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில், நான் கழகச் சட்டதிட்ட மாற்றம் பற்றித் தந்த அறிவிப்புகளையும் விளக்கத்தையும் இன்று அறிவகத்தில் கூடிய தி. மு. கழகத்தின் தலைமைச் செயற்குழு ஒருமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் ஜூன் 10-ம் தேதியில் கூடிய பொதுக் குழுவிலேயே விரிவான விவாதம் நடைபெற்று, கழகச் சட்டதிட்டத் தனிக்குழு தரும் அறிக்கையின் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொதுச் செயலாளராகிய எனக்கு அளிக்கப்பட்டது. எனது அறிக்கையின் கருத்தையும் முடிவையும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர்; கழகச் சட்டதிட்டத்தில் திருத்தம் செய்யவேண்டிய அவசியம்பற்றி கழகத் தோழர்களும் நன்கு உணர்ந்துள்ளனர் என்றும் அவர்கள் கருத்தறிவித்தார்கள். கழகத்தை இழித்தும் பழித்தும் பேசுவதையே வாடிக்கையாகக் கொண்'_வர்கள் தரும் விமர்சனங்கள் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை என்பதையும் நாம் எடுக்கும் முடிவுக்கு பொதுமக்களிடையேயும் நல்லாதரவு இருக்கிறது என்பதையும், செயற்குழு உறுப்பினர்கள் விளக்கிக் காட்டினார்கள்.

தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் உள்ளிட்ட ஒரு கூட்டாட்சியாக திராவிட நாட்டை அமைப்பது என்ற குறிக்கோளை வைத்து இது வரை திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி வந்தது. இந்தக் குறிக்கோளுக்கு அடிப்படையாக இருந்த முக்கிய காரணங்களாவன :

(1) ஒரு கூட்டாட்சியாக அமைக்கின்ற அளவுக்கு, மொழி கலாச்சார அடிப்படையில் இந்த நான்கு திராவிட மாநிலங்களிலும் ஒரு நெருங்கிய இயல்பான தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

(2) கூட்டாட்சித் தன்மையில் இந்திய அரசியலமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோதிலும், நடைமுறையில் அதிகாரங்கள் சிறுகச்சிறுக மத்திய ஆட்சியிடம் குவிக்கப்பட்டு, மாநிலங்கள் பெரிய முனிசிபாலிடிகள் என்ற தரத்துக்கு தாழ்த்தப்பட்டுள்ளன.

(3) தனித்தன்மை வாய்ந்த திராவிட மொழிகளும், திராவிடக் கலாச்சாரமும் பாதுகாக்கப்படவும், பரிமளிக்கச் செய்யப்படவும் திராவிடக்கூட்டாட்சியில் இயலும் என்றநிலை இருக்கிறது.

(4) நான்கு மாநிலங்களின் கூட்டாட்சி நிறுவப்பட்டால் பொருளாதாரத் துறையில் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகள் சரிசெய்யப்படுமென்றும், திராவிட மாநிலங்கள் முழுப்பொலிவையும் பெற முடியும் என்றும் வலுவாக உரைப்பட்டது.

இந்த ஐயப்பாடுகள் அடிப்படையற்றவை என்று வாதிடுபவர்கள் இருப்பினும், இந்த மாநிலங்களில் அதிருப்தியும், மனச்சோர்வும் வெகுவாக இருப்பதை மறுப்பவர்கள் யாருமில்லை.

ஆகவே தி. மு. கழகம் 'திராவிட நாடு' என்பது அடையவேண்டிய இலட்சியமென்றும் — முக்கிய பொறுப்பில் இன்று இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் சுயநிர்ணய உரிமை என்னும் கொள்கைக்கு வாதிட்டவர்களாதலால் நமது கோரிக்கை பெருவாரியான பொது மக்களின் உள்ளத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தால், அதற்கு அவர்கள் இணக்கமளிப்பார்கள் என்றும் நம்பி, இந்த நோக்கத்தை மனதில் கொண்டுதான் தி. மு. கழகம் சென்ற இரு பொதுத் தேர்தல்களிலும் இதை பிரச்சினைகளுள் ஒன்றாக வாக்காளர்களிடையே வைத்தது. தி. மு. க-வை ஆதரிக்கக் கூடாது என்று பொதுமக்களிடையே முழு வன்மையையும் பயன்படுத்தி ஆளும் கட்சி மட்டுமல்லாமல் அதனோடு இதர கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒட்டுமொத்தக் கூட்டாகப் பிரச்சாரம் செய்திட்ட போதும் இந்த இலட்சியம் பொது மக்களிடமிருந்து மேம்பட்ட ஆதரவையே பெற்றது. ஆகவே திராவிடநாடு கோரிக்கைக்கு யாராலும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாத வலிவும் பொலிவும் கிடைத்திருக்கிறது என்று தி. மு. கழகம் உரிமை கொண்டாட முடியும்.

இந்தக் கோரிக்கை காட்டுக் கூச்சல் என்றோ, கனவு அல்லது பிரமை என்றோ எந்த விமர்சகரும் கூறிட முடியாத நிலையைஅதுஅடைந்தது. அது ஒரு உண்மை நிலை என்கிற தகுதியையும் பெற்றது. அந்த அளவுக்கு தி. மு. கழகம் வெற்றி பெற்றிருக்கிறது.

ஆனால் திராவிடநாடு திட்டத்தை மதிப்பிடும் விமர்சகர்களில் பெரும்பாலோர், திராவிட நாடு அமைந்தால் விபரீதங்கள் ஏற்படும் என்று உண்மையிலேயே பயம் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. பாகிஸ்தானின் பின் விளைவுகளால் எழுந்த உணர்ச்சிகளிலிருந்து அவர்களால் தங்களை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

அந்த உணர்ச்சிகளின் ஆழ்ந்த தன்மையை தி. மு. க. உணர்கிறது. திராவிடநாடு அமைப்பு அப்படிப்பட்ட பயங்கரமானதும், அபாயகரமானதுமான விளைவுகளை ஏற்படுத்தாது என்று நான் தி. மு. க. சார்பாக அவர்களுக்கு உணர்த்த முயன்றும் முடியவில்லை.

திராவிட நாடு என்பதன் பொருள், உண்மையான கூட்டாட்சி தத்துவத்தை தாராள முறையில் நடத்திக்காட்டுவது என்றும், ஒரு இடத்தில் குவிந்திருக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கப்பட வேண்டும் என்கிற அனைவரும் ஒப்புக்கொள்ளும் கொள்கையின் வளர்ச்சிதான் அது என்றும் நான் விளக்கிக் கூறினேன்.

ஆனால் எத்தகைய விளக்கமும் வியாக்யானமும் அவர்களது பயத்தைப் போக்கிட முடியவில்லை. பெரும்பாலான விமர்சகர்கள் மேலும் ஒரு முறை நாடு துண்டாடுவதை அனுமதிக்க முடியாது என்றும் கூறிவந்தனர்.

திராவிடநாடு அமைவது இந்தியாவின் இதர பகுதிகளோடு மோதிக்கொள்ளாது என்று நான் அளித்த விளக்கமும் அவர்களைத் திருப்திப்படுத்தவில்லை.

அவர்களோ தங்கள் கைக்குக் கிடைத்த எந்தவித ஆயுதத்தையும் பயன்படுத்தி அந்தக் கோரிக்கையை அழித்திடவே முனைந்தனர்.

இறுதியில் அவர்கள் கைக்கு லாவகமாகக் கிடைத்த ஆயுதம் 16-வது திருத்தம் தான்.

என்னதான் பயமும் வெறுப்பும் இருந்தாலும், அந்த ஆயுதத்தை —அடிப்படை உரிமைகளைக் குறைப்பது என்கிற அந்த ஆயுதத்தை —ஆளும் கட்சி பயன்படுத்த முன் வந்திருப்பதை நானும் சரி; எந்த ஜனநாயகவாதியும் சரி; மறக்கவே முடியாது. இது முழுக்க முழுக்க சர்வாதிகாரத் தன்மையேயாகும்.

ஒருகருத்தினை எதிர்க்க; அந்தக் கருத்துக்காகப் பரிந்துரைப்போர் பொதுத்தேர்தல் என்னும் ஜனநாயகத்துக்கே உரிய ஒரே முறை மூலம், அந்தக் கருத்துக்கு பொது மக்கள் ஆறுதல் பெறுவதைத் தடுக்க சர்வாதிகார நாடுகள் தவிர, வேறு எந்த நாடாவது தனது அரசியல் சட்டத்தையே திருத்த முனைந்ததுண்டா என்று வியப்படைகிறேன்.

சுதந்திரத்தின் மீது இத்தகைய தாக்குதல்கள் நடத்திடும் வேளையில் உரிமை விரும்பிகள் கிளர்ந்தெழாமல் மௌனமாக இருப்பதைக் கண்டு நான் வேதனைப் படுகிறேன்.

மனப்போக்கை அறிந்து செயலாற்ற வேண்டிய ஒரு எளிய பிரச்சினையில், சர்வாதிகாரமுறை பயன்படுத்துவதற்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசுரிமைக்கும் ஒருமைத் தன்மைக்கும் ஊறுதேட வேண்டும் என்ற எண்ணம். திராவிடநாட்டுக் கொள்கையினருக்கு என்றும் இருந்தது கிடையாது. சீன ஆக்கிரமிப்பின்பொழுது தி. மு. கழகம் மேற்கண்ட முடிவும், உறுதியும் இந்த மனப்போக்கை எடுத்துக் காட்டியிருக்குமென நினைக்கிறேன். இந்தியாவைத் துண்டாட வேண்டும், இந்திய ஒருமைக்கும் அரசுரிமைக்கும் ஊறு தேட வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால், சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டபொழுது அத்தகைய உடனடியான ஒத்துழைப்பு எல்லாவற்றையும் பின் தள்ளி எழுந்த மன எழுச்சி-நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்ற உளம் நிறைந்த உணர்வு—அப்பொழுது உண்டாகியிருக்காது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் கிளப்பும் பயம்தான் இந்த ஒத்துழைப்புக்குக் காரணம் என ஆளவந்தார்களில் சிலர் கூறக் கூடும்; விவேகமற்ற அந்த வீண் பேச்சுகளைப்பற்றி நாம் கவலைப் படத் தேவையில்லை.

சீன ஆக்கிரமிப்பின்போது உடனடியாக எழுந்த எழுச்சியும், உருவான ஒற்றுமை உணர்வும், மிகக் குறிப்பிடத்தக்க ஒரு கட்டம் என நான் கருதுகிறேன். நம்மிடையேயுள்ள கருத்து வேறுபாடுகள்பற்றி மனம்விட்டுப் பேசி நல்லதொரு முடிவுகாண வேண்டிய ஒரு காலக்கட்டத்தில், ஆளுங்கட்சி சட்டப் பிரிவுகளைத் தயாரிக்கும் சர்வாதிகாரப் போக்கில் ஈடுபட்டது வருந்தத் தக்க ஒன்றாகும். அரியதொரு சந்தர்ப்

பத்தை ஆளுங் கட்சியினர் கைநழுவ விட்டுவிட்டனர் என்ற குற்றச்சாட்டை வரலாறு குறிக்காமல் போகாது.

இந்திய அரசியல் சட்ட 16-வது திருத்தம் இல்லாமற்கூட இந்திய ஒருமையையும் அரசுரிமையையும் தி. மு. க. உணர்ந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமையை உண்டாக்கி இருக்கலாம், ஆட்சியினர் முனைந்திருந்தால்! அரசியல் விவேகத்துடன் பிரச்சினையை அணுகியிருந்தால்! சர்வாதிகாரக் கோலத்தை மேற்கொள்ளாமல் சகிப்புத்தன்மையுடன் மாறுபட்டக் கருத்துக்களை ஆராய்ந்திருந்தால்! அத்தகைய போக்கில் ஆளுங் கட்சியினர் செயல்படாமல், எடுத்தேன்—கவிழ்த்தேன் என்ற எதேச்சாதிகார முறையில் சட்டப் பிரிவுகளை அள்ளித் தெளிக்க முற்பட்டிருப்பதை என்னால் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை.

இவற்றையெல்லாம் கூறி முடித்த பிறகு; இந்திய அரசுரிமையையும், ஒருமைத் தன்மையையும் நிலைத்திருக்கச்செய்ய வழிமுறைகளை வகுத்திடவேண்டிய அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த முக்கியமான உண்மை நிலையை உணர்ந்திருப்பதும் தி. மு. க. தனது சட்டதிட்டத்தை மாற்றிக்கொள்ள முன்வந்ததற்கான காரணங்களில் ஒன்றாகும்.

எங்கள் சட்டதிட்டத்தில் இப்போது செய்யப்பட்டுள்ள திருத்தத்திலும் இதைத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளோம்.

எந்த நடைமுறைத் திட்டம் அமுலாக்கப்பட்டாலும் அது இந்திய அரசுரிமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், அதன் அரசியல் சட்டத்திற்கும் உட்பட்டதாகத்தான் இருக்கும்—இருக்கவேண்டும் என்று அந்தத் திருத்தத்தின் மூலம் அறிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

16-வது திருத்தத்திற்கு ஆதரவாக என்னதான் வாதங்கள் அடுக்கப்பட்டாலும், அது இந்திய அரசுரிமையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதற்காகவே கொண்டுவரப்பட்டதல்ல என்பதையும், எங்கள் சட்டதிட்டத்தைத் திருத்திக் கொண்ட இந்த நேரம் சொல்லிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அடுத்த பொதுத் தேர்தலில் வாக்காளர்களின் கொதிப்பில் இருந்து தப்பித்துக் கொள்ளவும், தி. மு. க.வை அழிக்கவும், எங்கள் அரசியல் எதிரிகள் தேடி அலைந்து கண்டுபிடித்த கடைசி ஆயுதம் என்பதை அறிவார்ந்த பொதுமக்கள் விளக்கம் உரைக்கத் தேவையின்றியே உணர்ந்து கொள்வார்கள்.

**அதனால்தான் எங்கள் அரசியல் எதிரிகள் விரித்திருக்கும் வலையில் சிக்க மறுக்கிறோம்!**

**அவர்கள் விரும்புவதுபோல், நாங்கள் வீழ்ந்துவிட மாட்டோம்; தேர்தல் களத்தில் ஆளும் கட்சிக்கு அறைகூவல் விடுத்தே தீருவோம்!**

**அதனால்தான் எங்கள் உறுப்பினர்களில் பலர்—ஆழ்ந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் உந்தப்பட்ட இளைஞர்கள், சட்டத்தை மீறி வீரச் செயல் புரிந்து புகழ் தேடி சட்டத்தை மீறிடும் இயற்கையான எண்ணத்தையும் கட்டுப் படுத்திக் கொண்டார்கள்.**

தி. மு. கழக உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஆளுங்கட்சியின் தந்திரங்களைப் பார்த்து வைத்திருக்கின்றனர். அதிலும் முக்கியமாக அந்தப் பக்கமிருந்து வரும் தாக்குதல் அனைத்தும், அவர்கள் முயற்சி தோற்றதால் ஏற்பட்ட ஏமாற்றம்— எரிச்சல் ஆகியவற்றின் விளைவு என்பதும் அவர்களுக்கும் தெரியும்.

அதனால்தான் அவர்கள் நான் எடுத்திருக்கும் முடிவுக்கு முழு மனதோடு ஆதரவு தந்திருக்கின்றனர்.

பல்வேறு நிலையில் உள்ளோரும் கலந்தாலோசிக்கப் பட்டார்கள்.

நான் எடுத்த முடிவிற்கு கட்சியின் முழு ஆதரவும் இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுக் குழுவில் அமைக்கப்பட்ட கழகச் சட்டதிட்டத் தனிக் குழு பரிந்துரைத்தபடி கழகச் சட்ட திட்டச் சுதந்திர திராவிட நாடு கேட்கின்ற குறிக்கோள் பிரிவான 2- வது பிரிவை எடுத்து விட்டு.

அதற்குப் பதிலாக கீழ்க்கண்டபடி 2- வது பிரிவை இணைத்துக் கொள்கிறோம்.

‘தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கு மொழிவழிமாநிலங்களும், இந்திய அரசுரிமை ஒருமைத்தன்மை, அரசியலமைப்புச் சட்டம், அகிய வற்றுக்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரம் பெற்று. நெருங்கிய திராவிட கூட்டமைப்பை நிறுவப் பாடுபடுவது.’

தி.மு. கழகத்தின்மீது பழிதூற்றியாக வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்ட மாற்றுக் கட்சியினர், என்ன கூறுகிறார்கள் என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. பொது மக்களும் பத்திரிகைகளும் இது பற்றி நேர்மையான முறையில் கவனித்து, தங்கள் நல்லாதரவை நல்குவார்கள் என்ற நல்ல நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்திய அரசுரிமைக்கும் ஒருமைக்கும் அரசியல் சட்டம் ஆகியவற்றுக்குள் தான், கழகத்தின் திட்டங்கள் இருக்குமென்பதை நாங்கள் தெளிவாக்கியுள்ளோம்.

திருத்தப்பட்ட கட்சிக் குறிக்கோளில் கூறப்படும் திராவிட மொழிகள் வழங்கும் மாநிலங்களின் கூட்டமைப்பு என்பதும் இந்திய ஒருமைத் தன்மை அரசுரிமை ஆகியவற்றுக்குள்தான் இருக்கும்; இதை நன்கு கவனித்தால், நாங்கள் கூறுவது :

மாநிலங்களின் நிலைமையை உயர்த்துவதுடன் இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைப் பெறுவது.

பொருளாதாரத் துறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்குவது.

திராவிட மொழிகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதும் பரிமளிக்கச் செய்வதுமாகும்.

பிரிவினைக் கொள்கை காரணமாக இதுகாறும் தி. மு. கழகத்தை முழு அளவில் ஆதரிக்க இயலாத நிலையிலிருந்த எல்லோருடைய நல்லாதரவையும் நல்லெண்ணங்களையும் தி. மு. கழகம் இனி முழு அளவில் பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இனி அவர்களை தி. மு. கழகத்திலிருந்து பிரிப்பது எதுவும் இல்லை. தி. மு. கழகம் மேற்கொண்டுள்ள முடிவுக்கு எல்லா பக்கமிருந்தும் ஆக்கமும் ஊக்கமும் கிடைக்குமென்று நான் நம்புகிறேன்.

மக்களின் ஏழ்மை, வறுமை. வேதனை, அறியாமை ஆகியவற்றைநீடிக்கச்செய்யும்வகையில் ஆட்சி பீடத்தில் அட்டையைப் போல் ஒட்டிக் கொண்டிருக்கும் ஆளவந்தார்களின் ஆணவத்தை அழிப்பதற்கும், சூதுத் திட்டங்களை முறியடிப்பதற்கும் இந்த ஆதரவு தேவை !!

○

# பதினேழு!

—(0)—

**இன்னல் அளித்திடும் பதினேழு;**
**எரிக்கும் நாளதும் பதினேழு!**
**தன்னற் றமிழறப் போருக்குக்**
**கட்டியம் கூறிடும் பதினேழு!**

**இந்தியி னுதிக்கந் தீதென்று**
**இயம்பிச் சிறைசெலல் பதினேழு!**
**நந்தமி ழண்ணன் அதற்காக**
**நலிவினை ஏற்பதும் பதினேழு!**

**சட்டம் எரிந்திடும் பதினேழு!**
**சிறைகளை திறந்திடும் பதினேழு!**
**நாட்டினைக் கூட்டிடும் பதினேழு!**
**நற்றமிழ்க் காத்திடும் பதினேழு!**

**— கலைவாணிமுத்து**

## ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம்.

அக்டோபர் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி: ‘திராவிடன்’

## ‘திராவிடன்’ சந்தா விவரம்

—(0)—

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ... | ரூ. 8. |
| ஆறு மாதம் | ... | ரூ. 4. |
| தனிப்பிரதி | ... | 16 காசு. |

நிர்வாகி

திராவிடன், சென்னை-1.

# அஞ்சாநெஞ்சன் பதில்!

எம். எஸ். கண்ணன், மதுரை

**கே: தி. மு. க. திராவிட நாட்டுப் பிரிவினையைக் கைவிட்டு விட்டதாக மற்ற கட்சிகளும், மந்திரிகளும் கேலி பேசுகிறார்களே, உங்கள் பதில் என்ன?**

ப: திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தபோது, அமைச்சர்களும், காங்கிரஸ் கட்சியினரும், தி. மு. கழகம் பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டால், அதை மனதார வரவேற்போம், எதிர்காலத்தில் கழகம் நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்கும் தகுதியைக் கூட பெறமுடியும் என்று கூறி வந்தனர். ஆனால் இன்று தி. மு. கழகம் பிரிவினைக் குறிக்கோளை மாற்றி அமைத்துக் கொண்டு இந்திய ஒருமைத்தன்மை, அரசுரிமை ஆகியவற்றுக்குட்பட்டு தனது கொள்கையை நிறைவேற்றும் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. அமைச்சர்களுக்கும் ஆளுங்கட்சியினருக்கும் அரசியல் நேர்மையிலும் கண்ணியத்திலும் அக்கறையிருக்குமானால் கழகத்தின் முடிவை மனதார வரவேற்றிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக கேலி பேசுகிறார்களென்றால், அப்படிப் பேசுபவர்கள் தங்களைத் தாங்களே கேலி செய்து கொள்கிறார்கள் என்றுதான் பொருள்படும்.

அதாவது தாங்கள் விரித்த வலையில் தி. மு. கழகம் சிக்கவில்லையே என்ற பெரும் ஏமாற்றத்தின் விளைவாக கழகத்தைக் கேலி பேசி தங்களின் படுதோல்வியை மறைத்துக் கொள்ள அவர்கள் முயலுகின்றனர்.

இறுதியாக அறிஞர் அண்ணா அவர்களின் காலடியில் ஆள வந்தார்களின் சூழ்ச்சிகளும், கேலியும் கிண்டலும் மண்டியிட வேண்டிய நிலைதான் ஏற்படுமேயன்றி, கழகம் தலை குனியும் நிலை ஏற்படாது என்பது உறுதி.

அடுத்தபடியாக, பிரிவினைக் கோரிக்கையை கொள்கையாகக் கொண்டிருக்கும் சில கட்சிகளும் கழகத்தின் முடிவைப் பற்றி கேலி பேசுகிறார்களென்றால், கேலி பேசும் வேலையோடு தங்கள் கதை முடிந்துவிட்டதென்று கூறப் போகிறார்களா அல்லது தடைச்சட்டத்தை மீறப்போகிறார்களா அல்லது நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு என்ற வித்தைக்கு அரசினரிடம் குத்தகைக்குப் போயிருக்கிறார்களா யென்பதையெல்லாம் அறிய, நாடு எதிர்பார்த்துக் கொண்டுதானிருக்கிறது. கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியும் விபரீத விளையாட்டில் இறங்கியுள்ள அக்கட்சிகளின் நிலை பரிதாபத்துக்குரியதாகும்.

எனவே கழகத்தைக் கேலி பேசுபவர்களின் உள் நோக்கங்கள் விரைவில் வெட்ட வெளிச்சமாகிவிடும்.

○

4ம் பக்கத் தொடர்ச்சி

வண்ணைமலை சட்டமன்ற இடைத் தேர்தலிலும் கழகத்திற்கும், காங்கிரசுக்கும் ஏற்பட்ட நேரடி போட்டியில் காங்கிரஸ் படுதோல்விகளைக் கண்டன.

இன்னும் சொல்லப்போனால், இந்த இடைத்தேர்தல்களில் அரசியல் அறத்தை அறவே இழந்துவிட்ட நிலையில், கம்யூனிஸ்டு கட்சி, தமிழரசுக் கழகம், பெரியார் கட்சி, சம்பத் கட்சி போன்றவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து கழகத்தை எதிர்த்தன.

அதிலும், குறிப்பாக திருச்செங்கோடு இடைத்தேர்தலின் போது கழகத்தின் மாபெருந் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும், கழகத் தலைவர்களில் பெரும்பாலோரும், கழகத்தை நடத்திச்செல்லும் ஆயிரக்கணக்கான கிளை நிர்வாகிகளும் அரசினரின் அடக்குமுறைக் கொடுமைக்கு ஆளாகி சிறைத்தண்டனை பெற்றிருந்த நேரத்தில், இக்கட்சிகளெல்லாம் காங்கிரசின் ஆட்சி முறைக்கு மாறுபட்டவைகள் என்ற அடிப்படையில் ஒதுங்கியிருந்திருக்கலாம். ஆனால் வளர்ந்துவரும் மக்களின் சக்தியை அழிக்க இதுதான் சமயம் என்ற பொருமை எண்ணங்கொண்டு காங்கிரசின் ஏகாதிபத்தியத்திற்குத் துணை போயின. என்றாலும் தீர்ப்பளிக்கும் மக்கள் மன்றம் நேர்மையின் பக்கம் நின்று கழகத்திற்கு மகத்தான வெற்றியைத் தேடித் தந்து அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதும், அழிக்க முடியாததுமான இடத்தையும் தேடித்தந்தது.

ஆக தோழர் சம்பத், கழகத்தை விட்டு வெளியேறி விட்டதாலேயோ அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுத்தேர்தல்—இடைத்தேர்தல்கள் மூலமாகவோ கழகத்தின் மகத்தான சக்தியை அசைக்க முடியவில்லையென்பதை ஆளும் வர்க்கமும் அதன் அடிவருடிகளும் உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் இதற்குப் பிறகும் இக்கட்சிகள் தெளிவு பெறவில்லை. மீண்டும் ஏதாவது குழப்பம் ஏற்படாதா, அதைப் பெரிதாக்கி கட்சியை அழித்து விடலாம் என்று தவங்கிடந்தன.

**மூன்றாவது கட்டம்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை-வளர்ச்சியை வாதத்துக்கு வாதம், கொள்கைக்கு கொள்கை என்ற முறையிலும், அல்லது மக்கள் மன்றத்தின் முன்வைத்து அதன் தீர்ப்புக்கு ஏற்ப நடப்பது என்ற (ஓட்டு முறை) பெருந் தன்மையிலும் எதிர்ப்பது என்பதில் படுதோல்வி கண்ட காங்கிரசுக்கு கடுகளவாவது சனநாயகப் பண்பு இருந்திருக்குமானால் தி. மு. கழகத்திடம், இவ்வளவு தோல்விகளைக் கண்டபிறகு, தங்களின் எதேச்சாதிகார போக்கிலிருந்து திருந்திக் கொண்டு, கழகத்தலைவரை அணுகிக் கலந்து பேசி நல்லதோர் முடிவுக்கு வர முயற்சித்திருக்கலாம். விவேகமுள்ள அரசாங்கத்தினர் அவ்வாறுதான் நடப்பார்கள், அவ்வாறு நடந்திருப்பதாகத்தான் அரசியல் வரலாறுகளும் கூறுகின்றன. ஆனால் ஆணவத்தால் அழியப்போகும் கட்சிகளுக்கோ, ஆட்சியினருக்கோ அந்த நல்ல புத்தி எங்கிருந்து வரும்?

ஆதலாலேதான் கழகத்தின் கொள்கையை வளர்ச்சியை, வாதத்தால், அல்லது ஓட்டு முறையால் வெல்ல முடியாத காங்கிரஸ் தன்னிடம் சிக்கியுள்ள அதிகார பலத்தைக் கொண்டு கழகத்தை அழித்து விடும்படியான அநீதியில் இறங்கி யிருக்கிறது. இந்த அநாகரீகத்தை வீரத்தனம் என்று கொக்கரிக்கும் பேர்வழிகளைப்பற்றி நாம் பொருட்படுத்தப் போவதில்லை. ஆனால் நாகரீக அரசியல் உலகம் இக்கொடுமையைக் கண்டிக்கத்தான் செய்கிறது.

ஆளும் கட்சி, தான் விரித்துள்ள இந்த வஞ்சக வலையில் கழகம் சிக்கி சீரழியும், அல்லது கழகத்தில் பிளவு ஏற்பட்டு அலங்கோலப்படும், அடுத்த பொதுத் தேர்தலில் நம்மை எதிர்க்க வலுப்பெற்ற எதிர்க்கட்சி வேறு ஏது? என்ற பேராசைக்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டது.

கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு மனம் பொறாத மாற்றுக் கட்சிகள்,—கழகம் அலங்கோலப் படாதா—அந்தச் சந்தடி சாக்கிலே நம் கட்சிக்கு இருந்துவரும் ஆள் பஞ்சம் தீராதா? அங்கிருந்து வருவோர் நமது கட்சிக்கு உயிரூட்ட மாட்டார்களா என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தன.

3—11—'63 அன்று சென்னையில் நடைபெற்ற கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்களிடையே வேறுபாடும், கட்சியில் பிளவும் ஏற்படுமென்று சில நாளிதழ்கள் கூட அவசரஅவசரமாக ஆருடம் கணித்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப்பெருந் தலைவர் அண்ணா அவர்கள், கட்சியின் எந்த ஒரு முக்கிய பிரச்சினையானாலும், கழகத் தோழர்களின் பெருவாரியான கருத்துக்கு ஏற்பவே முடிவெடுத்து, செயல்படுத்திவந்திருக்கிறார்களேயன்றி, தமது கருத்தை மற்றவர்கள்மீது திணிக்கும் எதேச்சாதிகாரப் போக்கு கொண்டவரல்ல என்பதை இப்போதாகிலும் மாற்றுக் கட்சிகளும், ஆளும் வர்க்கத்தினரும் உணர்ந்து தெளிவு பெறவேண்டும்.

3—11—'63 அன்று நடைபெற்ற செயற்குழுவில் கழக சட்டதிட்டத்தின் 2-வது விதி திருத்தப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற முடிவானது, கழகம் அழிந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்த கட்சிகளுக்கும் அரசினருக்கும் பேரிடி விழுந்ததுபோல ஆயிற்று என்று கூறினாலும் மிகையாகாது.

எனவே கழகத்தை நேர்மை வழியில் நின்று எதிர்ப்பதற்கு எந்த ஒரு காரணமும் இல்லையென்பதை இனியாகிலும் மாற்றுக்கட்சியினரும் நாடாள்வோரும் உணர்ந்து நடக்கவேண்டும். அதற்கு பதிலாக தவறான பாதையில் சென்று கழகத்தில் பிளவு உண்டாக்கிவிடலாம் — கழகத்தைப் படுகுழியில் வீழ்த்தலாம் என்று மனப்பால் குடித்தால், அக்கட்சிகள்தான் அந்தப் படுகுழியில் வீழ்ந்து மடியவேண்டிய பரிதாபநிலை ஏற்படும்.

அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் இயங்கிவரும் திராவிட முன்னேற்றக் கழகம் உணர்த்தும் கருத்தும், பதினைந்து ஆண்டுகால அரசியல் படப்பிடிப்பும் இதுவேயாகும். ஆதலின் ஆளும்கட்சியினரும் அவர்களுக்குத் துணைபோவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் பிற கட்சிகளும் இனியாகிலும் தெளிவு பெற்று நேர்மையான பாதையில் செல்ல முயற்சிக்குமென்று நம்புகிறேன்.

○




## மேகலாவின் மகத்தான சரித்திரப் படைப்பு!

# காஞ்சித் தலைவன்

——(0)——

தமிழக மக்கள் நீண்ட நாட்களாக எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த "காஞ்சித் தலைவன்" கலையழகும் கருத்தழகும் ஒருங்கே கொண்டு தென்னக வெள்ளித் திரைகளில் வெற்றிக்கொடி நாட்டி வருகிறான்.

காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவரும் நரசிம்ம பல்லவனைத் தோற்கடிக்கத் திட்டம் தீட்டுகிறான் புலிகேசி!

அதற்காக அவன் ரேணுட்டு சோழகுமாரியைக் காஞ்சிக்கு அனுப்பி, நரசிம்மவர்மனின் நண்பர்களையும் உதவியாளர்களையும் விரோதிகளாக்கும் முயற்சியில் ஈடுபடச் செய்கிறான்.

காஞ்சிக்கு வந்த சோழகுமாரி, காஞ்சித்தலைவனின் கலையார்வத்தையும், பேரழகையும், பெருவீரத்தையும் கண்டு அவன் மீது உண்மையிலேயே ஆசைகொண்டு விடுகிறாள்.

நாட்டின் நலனே தனது நலன்-என்று பாடுபடும் காஞ்சித்தலைவனின் தளபதி பரஞ்சோதி— இந்தக் காதலை எதிர்க்கிறான் துணையரசர்களின் பகை மூண்டுவிடுமே என்ற அச்சத்தால்.

கால ஓட்டத்தில் காஞ்சித் தலைவனுக்கும்—தளபதி பரஞ்சேர்திக்கும் கருத்து வேறுபாடு தோன்றுகிறது. துணையரசர்கள் உதவிக்கு வரமறுத்திருக்கும் நேரம் பார்த்து, காஞ்சியின்மீது போர் தொடுக்கிறான் புலிகேசி.

தன்னால்தானே இவ்வளவு தொல்லைகளும் என்று உணர்ந்த சோழகுமாரி தன் காதலையே தியாகம் செய்ய முன்வந்து துணையரசர்களின் உதவியை நாடிப் பெறுகிறாள்.

காஞ்சித் தலைவனின் ஒரே தங்கை—தளபதி பரஞ்சோதியின் இதயங்கவர் காதலி அண்ணனுக்காகத் தன் காதலனிடம் வாதாடி, வாளாவிருக்கும் அவனை வாளெடுத்துப் போர்க்களம் செல்லத் தூண்டும் முயற்சியில் தோல்வி கண்டு, தனது குலதெய்வத்திடம் சென்று முறையிட கோயிலுக்குச் செல்கிறாள்.

அன்றே காஞ்சித் தலைவனும் கோயிலுக்கு வருவதை அறிந்த புலிகேசியின் கையாள், கோயிலுக்கு வெடிமருந்து வைக்க அதிலே சிக்கி மாள்கிறாள் காஞ்சித் தலைவனின் தங்கை! தளபதி பரஞ்சோதியை இந்த நிகழ்ச்சி, உணர்ச்சி கொள்ளச் செய்கிறது.

போர் முழக்கம் எழுப்பி, புலிகேசியைப் புறமுதுகிடச் செய்து, வாதாபி வரை துரத்திச் செல்லும் காஞ்சித் தலைவனுக்கு தோளோடு தோள் கொடுத்து உதவுகிறான் பரஞ்சோதி.

இறுதியில் வெற்றி முழக்கம் எழுப்பிய காஞ்சித்தலைவனுக்கு—மனம் மாறிய துணையரசர்கள் சோழகுமரியின் காதலைப் பெரிதாக மதித்து இருவரையும் ஒன்று சேர்த்து வைக்கிறார்கள்.

'மந்திரிகுமாரி' 'மனோகரா' ஆகிய படைப்புகளுக்குப் பிறகு கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தை — காஞ்சித் தலைவனில் முழுக்க முழுக்க காணமுடிகிறது.

சரித்திரப் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ள "காஞ்சித் தலைவன்" விறுவிறுப்பான கதையமைப்பால் ஆவலையும், துடிப்பான வசனத்தால் உணர்ச்சியையும் பெருகச் செய்கிறது.

தமிழ்ப்பட உலகில் நீண்ட காலமாக இருந்துவந்த இடைவெளி நிறைவுசெய்யப் பட்டதைப் போன்று கலைஞர் கருணாநிதியின் வசனம் கருத்தாழம் பொதிந்ததாக அமைந்துள்ளது.

காஞ்சித்தலைவனும் சோழகுமாரியும் சந்திக்கும் கட்டங்களிலும், காஞ்சித்தலைவனும் பரஞ்சோதியும் தோன்றும் காட்சிகளிலும் கலைஞர் கருணாநிதியின் தனித்த பாணி சிறப்புப் பெறுகிறது.

காஞ்சித்தலைவனாகத் தோன்றும் புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு நல்ல வேடப் பொருத்தம். அரசவைக்காட்சிகளில் அவர் நடந்துவரும் பாங்கும், வீரம் பொங்க அவர் படைவீரர்களுக்கு அறிவுரை வழங்கும் காட்சியும் உண்மைக் காஞ்சித் தலைவனை நம் மனக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

நீண்ட நாட்களாக எம். ஜி. ஆர். அவர்களிடம் எதிர்பார்த்திருந்த வாட்போர் காட்சிகள் காஞ்சித் தலைவனில் இடம்பெற்றிருப்பது ரசிகர்களை மகிழ்ச்சியில் மூழ்கவைக்கிறது.

தளபதி பரஞ்சோதியாகத் தோன்றும் இலட்சியநடிகர் எஸ். எஸ். ஆர். மிடுக்காக நடித்துள்ளார். நாட்டுப்பற்றே பெரிதாக எண்ணி காதலையும் துறக்கத் துணிந்து, காஞ்சித்தலைவனின் சொற்களையும் தட்டிச் செல்லும் காட்சிகள் எஸ். எஸ். ஆர். நடிப்பால் நன்கு சிறக்கின்றன.

பானுமதியும், விஜயகுமாரியும் நடிப்பில் ஒருவரோடு ஒருவர் போட்டி போடுகின்றனர்.

சிலை செதுக்குமிடத்தில் காஞ்சித் தலைவனைக் கண்டு உரையாடும் கட்டத்திலும், விருந்துக்கு அழைத்த காஞ்சித்தலைவன் விஷம் தூவப்பட்ட உணவைப் சாப்பிடாமல் தடுக்க ஆடும் ஆட்டத்திலும் பானுமதியின் நடிப்பு பிரமாதம்.

அதேபோன்று விஜயகுமாரியும், காதலனோடு ஆடிப்பாடி விளையாடும் கட்டத்திலும், போர் முழக்கம் கேட்டதும் தன் காதலனைப் போர்க்களத்துக்குச் செல்லும்படி தூண்டும் கட்டத்திலும், கோயிலுக்குச் சென்று குலதெய்வத்திடம் முறையிடும் கட்டத்திலும் அவரது நடிப்பு உள்ளத்தை உருகச்செய்கிறது.

திரு. அசோகன், நடிகவேள் எம். ஆர். இராதா, திருச்சி காமாட்சி, மனோரமா, நடிகமணி டி. வி. நாராயணசாமி, வளையாபதி முத்துகிருஷ்ணன், டி. ஏ. மதுரம், ஜி. சகுந்தலா ஆகியோரும் கச்சிதமாக நடித்துள்ளனர்.

போர்க் காட்சிகள் நேர்த்தியான முறையில் மடமாக்கப்பட்டுள்ளன.

ஆலங்குடி சோமு தீட்டிய 'ஒரு கொடியில் இரு மலர்கள்', கலைஞர் கருணாநிதி தீட்டிய 'உலகம் சுத்துது எதனாலே' போன்ற பாடல்களை, கே.வி. மகாதேவன் இசையமைப்புடன், டி. எம். சௌந்தரராசன், பி. சுசீலா ஆகியோர் சிறந்த முறையில் பாடியுள்ளனர்.

ஏ. காசிலிங்கம் அவர்களது திறமைவாய்ந்த டைரக்ஷன் குறிப்பிடத்தக்க வெற்றியை அளித்துள்ளது.

நல்ல உணர்ச்சியூட்டும் தமிழ்ப் படத்தைத் தயாரித்து, நாட்டு மக்களது உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கும் விதத்தில் 'காஞ்சித் தலைவனை'த் தயாரித்த 'மேகலா பிக்சர்ஸ்' நிறுவனத்தினர், அனைவரின் ஒருமித்த பாராட்டுகளுக்கும் உரியவர்களாகிறார்கள் என்று கூறினால் மிகையாகாது.

— வீரன்

## பாராட்டுகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான அருமைத் தோழர். உடுமலை சாதிக்பாட்சா, பி.எஸ்.சி., பி. எல். அவர்கள் உடுமலை நகர மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் செய்தி அறிந்து மகிழ்ச்சி கொள்வதுடன் அவரையும், அவரைத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

நண்பர் சாதிக்பாட்சா அவர்களது பதவிகாலத்தில், உடுமலை நகரம் சுகாதாரவளர்ச்சியுடன் பொலிவுற்று விளங்கும் வகையில் அவரது பணி வெற்றியுற வேண்டுமென்றும் மனமார ஆசைப்படுகிறோம்.

-(ஆ—ர்.)

வெ. கிருஷ்ணமூர்த்தி
எம்.ஏ., பி.எல்.
சட்டமன்ற உறுப்பினர்

கடலூர்,
6—11—63

## திருமண அழைப்பு

நான், சென்னை தெ. வீரராகவன் அவர்களின் மகள் டி. வி. ஜெகதீசுவரி (பி.எஸ்சி.)யை 11—11—63 திங்கள் காலை 9 மணியளவில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும் கழகத் தலைவர்களின் முன்னிலையிலும் பண்ணுருட்டியை அடுத்த தட்டாம்பாளையம் கிராமத்தில் உள்ள எனது வீட்டில் திருமணம் செய்துகொள்ளுகிறேன். நண்பர்கள் அனைவரும் இதனையே அழைப்பிதழாகக் கொண்டு திருமணத்தில் கலந்துக்கொண்டு சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
வெ. கிருஷ்ணமூர்த்தி

[ பண்ணுருட்டியில் இருந்து தட்டாம்பாளையம் கிராமத்திற்குத் தனியாக பஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தந்தி : 'பண்ருட்டி' ]

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1